1993 மார்ச் 23]

160—

பின் தங்கிய கிராமங்களை கதர்த்துறை தத்து எடுக்கும் திட்டம்.

*11215—திரு. சி. சுவாமிநாதன்:

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர்த்துறை சார்பில் பின்தங்கிய கிராமங்களை தத்து எடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை கிராமங்கள் தத்து எடுக்கப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் பல இடங்களில் ரா மெட்டிரியல்ஸ் என்று சொல்லப்படுகின்ற கச்சா பொருட்கள் உதாரணமாக சுண்ணாம்புக்கல் என்று சொன்னால், ஆதாரங் கோட்டையில் நிறைய சுண்ணாம்புக்கல் கிடைக்கிறது, ஆலங்குடி என்று சொன்னால், நிறைய கடலை எண்ணெய் கிடைக்கிறது. கடற்கரைப் பகுதிகளான மணல்மேல்குடி, விசாகப்பட்டிணம் போன்ற பல இடங்களில் கருவாடு நிறைய கிடைக்கிறது. அதேபோன்று முந்திரிப் பருப்பு, முந்திரிக் கொட்டைகள் ஆலங்குடி, கந்தர்வக்கோட்டை போன்ற பகுதிகளில் நிறைய கிடைக்கிறது. அப்படிக் கிடைக்கின்ற இந்தக் கச்சாப் பொருட்களை முன்வைத்து, அந்தந்தக் கிராமங்களை தத்து எடுத்து அவர்களை தொழிலில் ஊக்குவிப்பதற்கு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் அந்தக் கிராமங்களை தத்து எடுத்து, கச்சாப் பொருட்களை அடிப்படையாக வைத்து, அவர்கள் தொழில் துவங்குவதற்கு உதவ அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் 2-10-1985 அன்று வெள்ளிவிழா கொண்டாடிய போது, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராமப்புறங்களில் 100 கிராமங்களைத் தத்து எடுக்கவேண்டும் என்று ஒரு தீர்மானத்தை மேற்கொண்டது. அது, கதர் வாரியத்தினுடைய நிதிநிலை காரணமாக முழுவதுமாக நிறைவேற்றப்படவில்லை. மேலும்,

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்டுக் கொண்டதைப் போல சுண்ணாம்புக்கால்வாய் போன்ற தொழில்களுக்கு தனி நபர் கடனும், கூட்டுறவுக் கடனும் வழங்கி வருவதால், தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் உள்ள எல்லாக் கிராமங்களிலும் இப்படிக் கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது தனி நபர் இந்தத் தொழிலில் ஈடுபடுவதற்கு கடன் கேட்டு விண்ணப்பிக்கிறபோது, அரசு உடனடியாக அதற்குரிய உதவியைச் செய்து வருகிறது. மேலும், தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய சிறப்பான ஆட்சியில் இத்தகைய கடன் வசதிகளைக் கேட்கிற போது, உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு கடன் உதவி வழங்கப்பட்டு வருகிறது என்பதை பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆ. குறுகிய கால வினா :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுகிய கால வினா எண். 2, திரு. வி. கே. லட்சுமணன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

குறுகிய கால வினா எண். 2—

கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலையைப் புறநகர்ப் பகுதிக்கு மாற்றல்.

*19559 —திரு. வி. கே. லட்சுமணன் :
மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலையைப் புறநகர்ப் பகுதிக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ):கோவை மத்திய சிறைச்சாலையைப் புறநகர்ப் பகுதிக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற கோவை தவிர, மற்ற நகரங்களில் மத்திய சிறைச்சாலைகள் நகரத்திற்கு அப்பால் அதிக தொலைவில் இருக்கின்றன, சான்றாக, வேலூரில் இருக்கிற,